கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.148/2011** தேதி: **09.09.2025**

பிரதிவாதி தரப்பு சாட்சி -1 (தேவகி, க/பெ.அன்னப்பன்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) நான் இன்று கோப்புகளை கொண்டுவந்துள்ளேன் என்றால் இல்லை. எதன் அடிப்படையில் வழக்கு சொத்து கோயில் சொத்து என்று கோருகிறேன் என்றால் 2.53 ஏர்ஸ் நிலத்தினை இனாமாக கோயிலுக்கு கொடுத்துள்ளார்கள் அதன் அடிப்படையில் தான் உரிமை கோருகிறேன். இனாம் பதிவேடு இல்லை என்றால் கோயில் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல.

2) இந்த வழக்கில் சர்வே எண் 2669/4 தான் வழக்கு சொத்தாக உள்ளது என்றால சரிதான். சர்வே எண் 2669/4 , 2669/1 மற்றும் 2577 ஆகிய சொத்துக்கள் அனைத்தும் ரோட்டுக்கு வடபுறம் அமைந்துள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. வழக்கு சொத்து எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்ற விவரம்எனக்கு தெரியுமாக என்றால் தெரியும்.

3) சர்வே எண் 2669/4 , 2669/1 மற்றும் 2577 ஆகிய சொத்துக்கள் பொறுத்து தான் வழக்கு என்றால் சரிதான். மேற்சொன்ன சர்வே எண்களில் எத்தனை வீடுகள் அமைந்துள்ளது என்றால் 15 க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. அந்த வீடுகளின் நீள அகலம்எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இதில் கூரை வீடுகளும் மாடி வீடுகளும் உள்ளது என்றால் சரிதான்.

PHEBE B
Digitally signed by PHEBE B
Date: 2025.09.10 06:13:23 +0530

4) இந்த வீடுகளுக்கு நகராட்சி தனித்தனியாக வரி வசூலித்து வருகிறது என்றால் சரிதான். இந்த வீடுகள் சுமார் 50 ஆண்டு காலமாக இருக்கிறது என்றால் சரிதான். ஆனால் கோயில் நிலத்தை ஆக்கிரமித்து தான் இருக்கிறார்கள்.

5) கோயிலில் இருந்து அந்த வீடுகளுக்கு வாடகை வாங்கப்பட்டதா என்றால் அந்த 15 வீடுகளில் இருந்தும் நாங்கள் வாடகை வாங்கவில்லை. அந்த 15 வீட்டுகாரர்களுக்கும் எங்களுக்கும் வாடகை ஒப்பந்தம் இல்லை என்றாலும் தற்போது 4 வீட்டு உரிமையாளர்கள் மீது மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரிதான். 15 வீடுகள் அங்கு இருக்க 4 வீட்டுக்காரர்கள் மீது மட்டும் வழக்கு தாக்கல் செய்யகாரணம் என்ன என்றால் 4 வீட்டுக்காரர்களுக்கும் பட்டா அவர்கள் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

6) வருவாய் கோட்டாட்சியர் விசாரனை செய்துதான் பட்டா அளிப்பார்கள் என்றால் சரிதான். வருவாய் கோட்டாச்சியரிடம் பட்டா தவறுதலாக கொடுக்கப்பட்டுள்ளது என்று மனு ஏதேனும் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் கொடுக்கப்பட்டுள்ளது. அம் மனு தற்போது எந்த நிலையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

7) வழக்கு சொத்தானது கோயிலுக்கு பாத்தியமான சொத்து இல்லை என்றாலும் அது அரசு புறம்போக்கு நிலம் என்றாலும் ஆகவே தான் அதற்கு பட்டா மாற்றம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல.

8) பி.த.சா.ஆ.5 ஆன உத்தரவில் சர்வே எண் 2669/4 என்பது அரசு புறம்போக்கு நிலம் என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் தற்போது

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.09.10 06:13:27 +0530

வரை அது கோயில் பெயரில் தான் உள்ளது. வழக்கு சொத்தின் மீது கோயிலுக்கு எந்த வித உரிமையும் இல்லை என்றாலும் கோயிலால் எந்த வித நடவடிக்கையும் எடுக்க முடியாது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தானது அரசு புறம்போக்கு நிலம் என்றாலும் அரசு பட்டா வழங்கி உள்ளது என்றாலும் சரியல்ல. அதை ரத்து செய்ய நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். உயர்நீதிமன்ற உத்தரவும் உள்ளது.

9) உயர்நீதிமன்றத்தில் பெறப்பட்ட உத்தரவு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதில் இவ்வழக்கில் உள்ள வாதிகள் தரப்பினரா என்றால் இல்லை. அப்போது அந்த உத்தரவு இவர்களை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான்.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை முற்றிற்று .

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.09.10 06:13:31 +0530